# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

## 2005 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சட்டம்

*(2005 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

*2005, செத்தெம்பர் மாதம் 16 ஆந் தேதிய* ***இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்*** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை : ரூபா 25.75** **தபாற் செலவு : ரூபா 10.00**

## 2005 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சட்டம்

*[2005 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*ச.வ.ஓ. 31/2005*

**இலங்கைப் போக்குவரத்துச் சபையைத் தாபிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சட்டத்தை நீக்கஞ் செய்வதற்கும் அத்துடன் 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்திற்கு விளைவாந்தன்மை யினவான திருத்தங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்கும் ; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்கு மானதொரு சட்டம்**

*இலங்கைப் போக்குவரத்துச் சபையைத் தாபித்த 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, மோட்டார்ப் போக்குவரத்துச் சட்டம், போக்குவரத்துச் சேவையை வழங்கும் பணியைப் பொறுப்பிக்கப் பெற்ற இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையையும் ஒன்பது பிராந்திய போக்குவரத்துச் சபைகளையும் தாபித்த இலங்கைத் தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சட்டத்தால் நீக்கஞ் செய்யப் பட்டதாதலாலும் :* முன்னுரை.

*1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டம் இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையாலும் 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழிற்பொறுப்பு முயற்சிகளை பகிரங்கக் கம்பனிகளாக மாற்றுதல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி குறித்த சில பிராந்திய போக்குவரத்துச் சபைகளை கம்பனிகளாக மாற்றி யதன் மூலம் உருவாக்கப்பட்ட மக்கள்மயமாக்கப்பட்ட கம்பனிக ளாலும் வழங்கப்பட்டு வந்த போக்குவரத்துச் சேவைகளை வழங்கும் பணிகளை பொறுப்பிக்கப்பெற்ற தேசிய போக்குவரத்துச் சபையைத் தாபித்ததாதலாலும் :*

*அத்துடன் 1996 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழு (திருத்தச்) சட்டத்தின் சட்டவாக்கத் தின் விளைவாக 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 46அ என்னும் பிரிவின் நியதிகளின்படி போக்குவரத்து சேவைகளை வழங்குவதற்கென*

2 –PL 000593– 1,250 (2005/08)

வரையறுக்கப்பட்ட வவுனியா மக்கள்மயமாக்கப்பட்ட பிரயாணி போக்குவரத்துச் சேவைகளும் ஒன்றிணைக்கப்பட்ட மக்கள்மயமாக் கப்பட்ட பஸ் கம்பனிகளும் உருவாக்கப்பட்டனவாதலாலும் 1987ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பகிரங்கக் கூட்டுத்தாபனங் களை அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழிற் பொறுப்பு முயற்சிகளை பகிரங்கக் கம்பனிகளாக மாற்றுதல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி வரையறுக்கப்பட்ட வட பிராந்திய போக்குவரத்துச் சேவைகளை வழங்குமாறு கடமைப் படுத்தப்பட்டதாதலாலும் :

அத்துடன், இப்பொழுது இச்சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு மேற்கூறப்பட்ட கம்பனிகளின் எல்லாச் சொத்துக்கள், பொறுப்புக்கள், உரிமைகள் அத்துடன் கடப்பாடுகள் என்பவற்றை உரித்தாக்குவதும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையுடனும் மேற்கூறப்பட்ட சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்டு பின்னராக பகிரங்கக் கம்பனிகளாக மாற்றப்படாத அத்தகைய எண்ணிக்கையினதான பிராந்தியப் போக்குவரத்துச் சபைகளுடன் சேர்த்து இலங்கைத் தேசிய அரசுப் பேரவையின் 1978ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையைக் கலைப்பதற்கு ஏற்பாடு செய்வதும் அவசியமாகியுள்ள தாதலாலும் :

அத்துடன் 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 46அ என்னும் பிரிவின் நியதிகளின்படி உருவாக்கப்பட்டதான வரையறுக்கப்பட்ட வவுனியா மக்கள்மயமாக்கப்பட்ட பிரயாணிப் போக்குவரத்துச் சேவைகளையும் ஒன்றிணைக்கப்பட்ட மக்கள்மயமாக்கப்பட்ட பஸ் கம்பனிகளையும் 1987 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க, பகிரங்கக் கூட்டுத்தாபனங்களை, அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான தொழிற்பொறுப்பு முயற்சிகளை பகிரங்கக் கம்பனிகளாக மாற்றுதல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் நியதிகளின்படி உருவாக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட வடபிராந்திய போக்குவரத்துக் கம்பனியையும் ஒடுக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு தேவைப் படுத்தப்பட்டுள்ளது ஆதலாலும் :

சேவை வழங்கும் பல்வேறு ஒழுங்கமைப்புகளை ஒன்றிணைத்து அதன்மூலம் சார்புடைய எல்லா சேவைகளையும் வழங்கு தலை ஒரே கூறின்கீழ் மையப்படுத்துவதன் மூலம் போக்குவரத்துச் சேவைகளை சிக்கனமானவையும் திறமையானவையுமாக்க ஏற்பாடு செய்வது அவசியமாகியுள்ளது ஆதலாலும் :

இப்போது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**1.** இச்சட்டம் 2005 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சரால் நியமிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும். (இது இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்).

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

## பாகம் I

### இலங்கைப் போக்குவரத்துச் சபை

**2.** (1) "இலங்கைப் போக்குவரத்துச் சபை" என அழைக்கப்படும் சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும் (இதனகத்துப் பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்). இது பின்வரும் உறுப்பினர் களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

இலங்கைப் போக்குவரத்துச் சபையைத் தாபித்தல்.

(அ) மூன்று பதவிவழி உறுப்பினர்கள் அதாவது —

(i) போக்குவரத்து என்னும் விடயத்திற்குப் பொறுப் பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளரின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் தரத்துக்குக் குறையாத பிரதிநிதி ஒருவர் ;

(ii) மாகாணசபைகள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலா ளர் ; அத்துடன்

(iii) திறைசேரிப் பிரதிச் செயலாளர் ஒருவர் ; அத்து டன்

(ஆ) போக்குவரத்து, முகாமைத்துறை, சட்டம், நிதி அல்லது பொறியியல் என்னும் துறைகளில் உயர் தொழில்சார் தகைமைபெற்ற ஆட்களிடையேயிருந்து பணிப்பாளர் களாக அமைச்சரால் நியமிக்கப்பட்ட நான்கு உறுப் பினர்கள் (இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" என்று குறிப்பீடு செய்யப்படுவர்).

(2) அமைச்சர் சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களிடையே யிருந்து ஆளொருவரை சபையின் தவிசாளராக இருப்பதற்கென நியமித்தல் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் அவர் முன்னரே பதவியை வறிதாக்கினாலன்றி அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி மூன்று ஆண்டுகளைக்கொண்டவொரு காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும். காலங்கடப்பதன் காரணமாக பதவியை வறிதாக்கும் நியமன உறுப்பினர் ஒருவர் மீள் நியமனத்திற்கு தகுதியுடையவராதல் வேண்டும்.

(4) எவரேனும் நியமிக்கப்பட்ட உறுப்பினர் சுகயீனம் காரணமாக, இலங்கையில் இல்லாதிருப்பதன் காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் தமது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்ற இயலாதிருப்பின் அவரது இடத்திற் செயலாற்றுவதற்கென அமைச்சர் வேறு எவரேனும் ஆளை நியமிக்கலாம்.

(5) உறுப்பினரொருவர் அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் மூலம் சபையிலிருந்து விலகலாம். அமைச்சர், அவ்வாறு செய்வது உசிதமானதெனக் கருதினால் எடுத்துரைக்கப்படும் காரணத்திற்காக நியமன உறுப்பினர் ஒருவரைப் பதவியிலிருந்து அகற்றலாம்.

*சபையின் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண்ணும் நடவடிக்கை முறையும்.*

**3.** சபையின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் நான்கு ஆதல் வேண்டும். பதவிவழி உறுப்பினர் ஒருவர் எல்லா நேரங்களிலும் கூட்ட நடப்பெண்ணில் அடங்கியுள்ள நான்கு உறுப்பினர்களுள் ஒருவராக இருத்தல் வேண்டும். இச்சட்டத்தின் ஏனைய ஏற்பாடுகளுக்கமைய சபையானது, சபையின் கூட்டங்கள் மற்றும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்களை நிறைவேற்றல் என்பன தொடர்பிலான அதன் நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்தலாம்.

*உறுப்பினர்களிடையிலான வெற்றிடம் சபையின் செயல்களை செல்லுபடியற்றதாக்குதலாகாது.*

**4.** சபையின் உறுப்பினர்களிடையே ஏதேனும் வெற்றிடம் உள்ளது அல்லது அதன் உறுப்பினர்கள் எவரினதும் நியமனத்தில் ஏதேனும் குறைபாடு உள்ளது என்ற காரணத்தினால் மாத்திரம் அதன் செயல் அல்லது நடவடிக்கை எதுவும் செல்லுபடியற்றது எனக் கருதப்படுதலாகாது.

**5**. சபையின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடிய அத்தகைய முறையிலும் அத்தகைய வீதங்களிலும் வேதனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

சபை உறுப்பினர்களின் வேதனம்.

**6**. (1) சபையின் பொது இலச்சினை சபை காலத்திற்குக் காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்.

சபையின் இலச்சினை.

(2) சபையின் இலச்சினை சபையால் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றப்படலாம்.

(3) சபையின் இலச்சினை சபையின் இரண்டு உறுப்பினர்களின் முன்னிலையிலன்றி சாதனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. இவர்களுள் ஒருவர் பதவிவழி உறுப்பினர் ஒருவராக இருத்தல் வேண்டும். இவர்கள் இருவரும் தாங்கள் சமுகமாயிருந்தமைக்கு அடையாளமாக சாதனத்தில் அல்லது ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

(4) சபையின் இலச்சினை எந்தச் சாதனத்தில் அல்லது ஆவணத்தில் பொறிக்கப்படுகின்றதோ அந்தச் சாதனங்களின் அல்லது ஆவணங்களின் பதிவேடொன்றை சபை பேணுதல் வேண்டும்.

**7**. (1) சபை, அதன் தத்துவங்களையும் பணிகளையும் கடமைகளையும் பிரயோகிக்கையிலும், புரிகையிலும், நிறைவேற்றுகையிலும், தேசிய நலனை அல்லது சபையின் திறமையான நிர்வாகத்தைப் பாதிப்பதாகத் தமக்குத் தோன்றும் ஏதேனும் விடயம் தொடர்பில் அமைச்சர் காலத்துக்குக் காலம் வழங்கக்கூடியவாறான அத்தகைய பொதுவான அல்லது விசேட பணிப்புகளுக்கு சபை அமைவாகவும் அவற்றிற்கிணங்க செயலாற்றுதலும் வேண்டும்.

சபைக்கு அமைச்சரின் பணிப்பு.

(2) அமைச்சர், காலத்துக்குக் காலம், அவரால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஆளினால் அல்லது ஆட்களினால் சபையின் எல்லா அல்லது எவையேனும் செயற்பாடுகள் புலனாய்வு செய்யப்படவேண்டும் எனக் கட்டளையிடலாம் என்பதுடன் அத்தகைய கட்டளை ஆக்கப்படுவதன் மீது சபையானது கட்டளையை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா வசதிகளையும் அளித்தலும் அத்தகைய எல்லா தகவலையும் கொடுத்துதவுதலும் வேண்டும்.

(3) அமைச்சர், வேறு எவரேனும் அமைச்சருக்குக் குறித்தொதுக்கப்பட்ட பணிகளைப் பாதிக்கும் ஏதேனும் விடயம் தொடர்பில் (1)ஆம் உட்பிரிவின்கீழ் பணிப்புகளை வழங்குகையில் அந்த அமைச்சருடனான கலந்தாலோசனையுடன் செயலாற்றுதல் வேண்டும்.

சபையால் கடமைகளும் பணிகளும் தத்துவங்களும் கையளிக்கப்படுதல்.

**8.** (1) சபை, 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ), (ஆ) என்னும் பந்திகளிலும் 11 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ), (ஒ), (ஓ), (ஔ) என்னும் பந்திகளிலும் குறித்துரைக்கப்பட்டவைகளைத் தவிர அதன் ஏனைய தத்துவங்கள் அல்லது கடமைகள் எவற்றையும் சபையின் எவரேனும் உறுப்பினருக்கு அல்லது சபையின் எவரேனும் ஊழியருக்குக் கையளிக்கலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் எந்த ஆளுக்கு ஏதேனும் தத்துவம் அல்லது கடமை கையளிக்கப்பட்டுள்ளதோ அந்த ஆள் ஒவ்வொருவரும் அவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவத்தை அல்லது கடமையை சபையின் பொதுவான அல்லது விசேட பணிப்புகளுக்கமைய பிரயோகித்தல் அல்லது நிறைவேற்றுதல் வேண்டும்.

மத்திய மதியுரைக்குழு.

**9.** (1) இச்சட்டத்தின் நோக்கத்துக்காக ஒரு மதியுரைக் குழு தாபிக்கப்படுதல் வேண்டும்.

(2) மதியுரைக் குழுவானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) திறைசேரிச் செயலாளரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் திறைசேரி பிரதிச் செயலாளர் ஒருவர்;

(ஆ) போக்குவரத்து எனும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சு மேலதிகச் செயலாளர் ஒருவர் ;

(இ) பின்வரும் இயைபான நிறுவனங்களால் பெயர் குறித்து நியமிக்கப்படும் நான்கு பிரதிநிதிகள் —

(i) இலங்கை எந்திரவியலாளர்கள் நிறுவனம் ;

(ii) இலங்கை வர்த்தகக் கூடம் ;

(iii) கணிப்பியல் திட்ட போக்குவரத்து பட்டயம் பெற்ற நிறுவனம் ;

(iv) தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ; அத்துடன்

(ஈ) ஊழியருடனான ஆலோசனையுடன் அமைச்சரால் நியமிக்கப்படும் வேறு மூன்று உறுப்பினர்கள்.

(3) மதியுரைக் குழுவின் பணிகள் பின்வருவனவாதல் வேண்டும் :—

(அ) நியமிக்கப்பட்ட உறுப்பினர்களின் நியமனம், பதவி நீக்கம் மீது போக்குவரத்து எனும் விடயம் பொறுப்பிக்கப்பட்ட அமைச்சருக்கு விதப்புரைகளைச் செய்தல் ;

(ஆ) 10 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஆண்டுத் திட்டம் உட்பட, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு பயன் கொடுக்கும் நோக்கத்துக்கு அவசியமானதென கருதுகின்றதும் அவரால் அல்லது அதனால் அதற்கு ஆற்றுப்படுத்தப்படும் எல்லாக் கருமங்கள் மீதும் சபைக்கு மதியுரை வழங்குதல் ;

(இ) சபையின் வினைத்திறமையான நிருவாகம் தொடர்பாக அமைச்சருக்கு விதப்புரைகளை செய்தல்.

(4) மதியுரைக்குழுவானது அதனது அலுவல்களை ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(5) மதியுரைக்குழுவின் கூட்டமொன்றுக்கான கூட்டநடப்பெண் மூன்றாகும், அத்துடன் மதியுரைக்குழுவானது அதனது உறுப்பினர்களுள் ஒருவரைத் தவிசாளராகத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(6) நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் பதவி விலகலினால், அகற்றலினால் அல்லது இறப்பினால் பதவியை முன்னரே வறிதாக்கினாலன்றி மூன்று ஆண்டுகளுக்கு பதவி வகித்தல் வேண்டும். மதியுரைக்குழுவுக்கு நியமிக்கப்பட்டவரும் அவரது பதவிக்காலம் முடிவுறுவதன்மூலம் பதவியை வறிதாக்குகின்றவருமான உறுப்பினர் ஒருவர் மீள் நியமனத்துக்குத் தகுதியுடையவராதல் வேண்டும்.

(7) மதியுரைக் குழுவுக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதத்தின் மூலம் பதவியிலிருந்து விலகலாம்.

(8) மதியுரைக்குழுவுக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் சுகயீனம் அல்லது வேறு பலவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாதிருப்பதன் காரணமாக அவரது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாக நிறைவேற்றவியலாதிருக்குமிடத்து அவரது இடத்திற் செயலாற்றவென அமைச்சர் வேறோர் ஆளை (2) ஆம் உட்பிரிவின் நியதிகளின்படி நியமிக்கலாம்.

## பாகம் II

### சபையின் கடமைகளும் தத்துவங்களும்

சபையின் கடமைகள்.

**10.** (1) பின்வருவன சபையின் கடமையாதல் வேண்டும் :–

(அ) தேசிய போக்குவரத்துஆணைக்குழுவுடனும் இயைபான மாகாணப் போக்குவரத்து அதிகாரசபைகளுடனுமான கலந்தாலோசனையுடன் பொருளாதார வளத்தை உறுதிப்படுத்தும் வகையில் திறமையானதும் பயனுறுதியுள்ளதுமான கிரமமான வசு வண்டிச் சேவையொன்றை வழங்குதல் ;

(ஆ) மேற்படி குறிக்கோளை எய்துவதற்கு சபையானது, வெவ்வேறு பிரேரணைகளுக்குப் பொறுப்புடைய இயைபான பங்காளர்களையும் முழுத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்துவதில் சம்பந்தப்படக்கூடுமான காலகட்டங்களையும் இனம்கண்டு நடைமுறைப் படுத்துகை நிறைவேற்றப்பட வேண்டிய முறையை இனம் கண்டு அதன் பிரேரணைகளை உள்ளடக்கிய ஆண்டுத் திட்டமொன்றைத் தயாரித்தல் வேண்டும். அதற்கிணங்க ஆண்டுத்திட்டம் தொடர்பிலான ஆண்டு வரவுசெலவுத் திட்டமொன்றும் தயாரிக்கப் படுதல் வேண்டும் ;

(இ) சபையின் முழுத் தொழிற்பாடுகளும் சாத்தியப்படக் கூடிய அதிகபட்ச அளவுக்கு இயலக்கூடுமாயிருப்பதை உறுப்படுத்தும் வகையில் அத்தகைய தொழிற்பாடுகள் நிறைவேற்றவும் பேணவும் படும் அத்தகைய முறையில் சபையின் அலுவலை நிறைவேற்றுதல் ;

(ஈ) போக்குவரத்துத் துறையில் பகிரங்கப் போக்குவரத்தின் தரத்தை மேம்படுத்தும் வேறு ஏதேனும் செயற்றிட்டத்தை அல்லது சேவையை நடைமுறைப்படுத்துதல்.

(2) இப்பிரிவிலுள்ள எதுவும், ஏதேனும் நீதிமன்றத்தின் அல்லது நியாயசபையின் முன்னிலையில் சபை வேறுவகையில் உட்படுத்தப்படாத வழக்கு நடவடிக்கைகளினால் வலுவுக்கிடப்படற்பாலதான ஏதேனும் விதமான கடமையை அல்லது பொறுப்பை சபையின்மீது நேரடியாகவோ அல்லது நேரடியாக அல்லாமலோ சபையின் மீது சுமத்துவதாகப் பொருள் கொள்ளப்படுதலாகாது.

**11.** (1) சபை பின்வரும் எல்லாத் தத்துவங்களையும் அல்லது அவற்றுள் எதனையும் பிரயோகிக்கலாம் :– சபையின் தத்துவங்கள்.

(அ) அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் கொள்வதற்கு, வைத்திருப்பதற்கு, எடுப்பதற்கு அல்லது குத்தகைக்குக் கொடுப்பதற்கு அல்லது வாடகைக்கு விடுவதற்கு, ஈடுவைப்பதற்கு, அடகுவைப்பதற்கு அத்துடன் விற்பதற்கு அல்லது வேறுவகையில் கையுதிர்ப்பதற்கு ;

(ஆ) சபையின் வேலையைக்கொண்டு நடாத்துவதற்கு அவசியமாக்ககூடியவாறான அத்தகைய அலுவலர்களையும் சேவையாளர்களையும் ஊழியத்தில் அமர்த்துவதற்கு ;

(இ) சபையால் சபையின் வேலையைக் கொண்டு நடாத்துவதற்குத் தேவையான ஆட்களின் பயிற்சிக்கான வசதிகள் சபையால் வழங்கப்படுதலும் ஏனையோரால் வழங்கப்படுவதற்கான உதவியும் உட்பட, சபையால் ஊழியத்தில் அமர்த்தப்பட்டுள்ள ஆட்களின் தேர்ச்சியை அல்லது சபையின் உபகரணத்தின் வினைத்திறமை அல்லது அந்த உபகரணம் இயக்கப்படும் முறையை முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்திற்காக எதனையும் செய்தல் ;

(ஈ) ஆணைக்குழுவால் ஊழியத்தில் அமர்த்தப்பட்டுள்ள ஆட்களுக்கு நலன்புரி அத்துடன் பொழுதுபோக்கு வசதிகளையும், வீடுகள், விடுதிகள் அத்துடன் அதே போன்ற வேறு தங்குமிட வசதியையும் வழங்குதல் ;

(உ) சபையின் தொழிலின் நோக்கத்திற்குத் தேவைப்படுத் தப்படக்கூடியவாறான அத்தகைய வேறு உபகர ணத்தை நிர்மாணித்தல், உற்பத்தி செய்தல், கொள்வ னவு செய்தல், பேணுதல் அத்துடன் பழுதுபார்த்தல் ;

(ஊ) சபையால் ஏற்றிச் செல்லப்படும் பிரயாணிகளுக்கு நிழற்கூடங்கள், வசு நிலையங்கள் போன்ற அத்தகைய வசதிகளை வழங்குதல் ;

(எ) கொடுப்பனவுக்காக செய்தித்தாள்களை, தபால்களை, பொதிகளை அல்லது வேறு அஞ்சற் பொருட்களை ஏற்றிச் செல்வதைப் பொறுப்பேற்றல் ;

(ஏ) சபையால் செயல்முறைச் சாத்தியமற்றது அல்லது கடினமானது எனக் கருதப்படும் மார்க்கங்களில் சமயா சமய வசுவண்டிச் சேவைகளை வழங்க முயலுதல் ;

(ஐ) சபையின் வசுவண்டிகள் தரித்திருக்கக்கூடிய இடங் களை ஏற்பாடு செய்தலும் பேணுதலும் ;

(ஒ) சபையின் கடமைகளைப் புரிவதற்கும் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் செய்து கொள்ளுதலும் நிறைவேற்றுதலும் ;

(ஓ) சபையின் அலுவல்களின் நிர்வாகம் தொடர்பில் வதி களை ஆக்குதல் ; அத்துடன்

(ஔ) சபையின் அபிப்பிராயப்படி அதன் அலுவல்களை தகுந்தவாறு கொண்டுநடாத்த வசதியளிப்பதற்கு அவசியமான வேறு எல்லாக் காரியங்களையும் செய் தல்.

**12.** சபையின் தவிசாளர், சபையின் கணக்கீட்டு அலுவலராதல் வேண்டும்.

*சபையின் கணக்கீட்டு அலுவலர்.*

**13.** சபை அதன் பிரதம நிறைவேற்று அலுவலராக இருப்பதற் கென ஆளொருவரை நியமித்தல் வேண்டும். இவர், சபையின் அலுவல்களின் முகாமைத்துவத்தின் பொறுப்பும், சபையின் தத்துவங்கள் மற்றும் கடமைகள் தொடர்பிலானவையும், அவற் றில் நின்றெழுகின்றவையுமான எல்லாக் கருமங்களின் தகுந்த நிர்வாகமும் பொறுப்பிக்கப்படட முழுநேர அலுவலரொருவராதல் வேண்டும். பிரதம நிறைவேற்று அலவலர் சபையால் தீர்மானிக்கப் படக்கூடியவாறான அத்தகைய ஊதியத்தையும் வேறு நலன்களை யும் பெறுதல் வேண்டும்.

*பிரதம நிறைவேற்று அலுவலரின் நியமனம்.*

**14.** (1) சபையின் வேண்டுகோளுக்கிணங்க பகிரங்க சேவை யிலுள்ள அலுவலர் எவரும் அவ்வலுவலரினதும் அத்துடன் பொது நிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாயுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன் அதனையொத்த சம்மதத்துடன் சபையால் தீர்மானிக்கப்படு கின்றவாறான அத்தகைய காலப் பகுதிக்கு சபையின் பணியாட் டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதனையொத்த சம்மதத்துடன் அத்தகைய பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

*சபையின் பணி யாட்டொகுதிக்குப் பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.*

(2) பகிரங்க சேவையிலுள்ள அலுவலரொருவர் சபையின் பணியாட்டொகுதிக்குத் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1991ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(3) பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் ஒருவர் சபையின் பணியாட்டொகுதிக்கு நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1991ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் அத்தகைய அலுவலருக்கும் அவர் தொடர்பிலும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(4) ஆளெவரும் எந்த உடன்படிக்கையின் மூலம் குறித்துரைக் கப்பட்டவொரு காலப்பகுதிக்கு அரசாங்கத்திற்குச் சேவையாற்ற உடன்பட்டுள்ளாரோ அந்த உடன்படிக்கையொன்றைச் செய்து கொண்டுள்ள ஆளெவரையும் சபை தொழிலுக்கமர்த்துமிடத்து, அந்த ஆளினால் சபைக்கு ஆற்றப்பட்ட ஏதேனும் சேவைக்காலம் அத்தகைய ஒப்பந்தத்திற்கான கடப்பாடுகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அரசாங்கத்திற்கான சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

*சபையின் அலுவலர்களும் சேவை யாளர்களும் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல்.*

**15.** சபையின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படு தல் வேண்டும்.

*சபை இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட அட்டவணைப் படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல்.*

**16.** சபையானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட அட்டவணைப்படுத்தப்பட்ட ஒரு நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.

*சபைக்காக காணி கொள்ளுதல் சட்டத்தின்கீழ் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதல்.*

**17.** (1) சபையின் அலுவலின் நோக்கங்களுக்காக ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக்கொள்ள வேண்டியிருந்து அமைச்சர், அத்தகைய உத்தேசக் கொள்ளுதலை வர்த்தமானியில் வெளி யிடப்படும் கட்டளை மூலம் அங்கீகரிக்கின்றவிடத்து, அந்த ஆத னம் ஒரு பகிரங்க நோக்கத்திற்காகத் தேவைப்படும் ஆதன மொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற் கிணங்கக் காணி கொள்ளுதல் சட்டத்தின்கீழ் கட்டாயமாகக் கொள் ளப்படலாமென்பதுடன் சபைக்கு அறுதி மாற்றம் செய்யவும் படலாம்.

(2) சபைக்காக காணி கொள்ளுதல் சட்டத்தின்கீழ் ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுவதற்காகச் செலுத்தப்படற் பாலதான ஏதேனும் பணத்தொகை சபையினால் செலுத்தப்படு தல் வேண்டும்.

*அசைவுள்ளவையும் அசைவற்றவையுமான அரச ஆதனம் சபைக்குக் கிடைக்கக் கூடியதாதல் வேண்டும்.*

**18.** (1) அரசுக்குரிய ஏதேனும் அசைவற்ற ஆதனம் சபையின் அலுவலின் நோக்கத்திற்காக தேவைப்படுமிடத்து, அத்தகைய நோக்கம் அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் அத்தகைய ஆதனத்தை எந்த நோக்கத்திற்காக விசேட வழங்கலாக அல்லது குத்தகையாகக் கொடுக்கலாமோ அந்தவொரு நோக்கமாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அதற்கிணங்க அக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் சபைக்கு அத்தகைய ஆதனத்தை விசேடமாக வழங்குதல் அல்லது குத்தகைக்கு விடுதல் தொடர்பில் ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(2) அரசுக்குரிய ஏதேனும் அசைவுள்ள ஆதனம் சபையின் நோக்கத்திற்குத் தேவைப்படுகின்றவிடத்து, அமைச்சர் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அந்த ஆதனத்தின் ஆட்சியுடைமையும் பயன்பாட்டையும் சபைக்கு அறுதிமாற்றம் செய்து உரித்தாக்கலாம்.

*சபையின் கடன் வாங்கல் தத்துவங்கள்.*

**19.** (1) சபையானது அமைச்சரின் சம்மதத்துடன் அல்லது அவரால் அளிக்கப்பட்ட ஏதேனும் பொது அதிகாரத்தின் நியதிகளின்படி இச்சட்டத்தின்கீழ் அதன் கடப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு அல்லது கடமைகளைப் புரிவதற்கு சபைக்குத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளை மேலதிகப்பற்று என்ற வகையில் அல்லது வேறு வகையில் தற்காலிகமாகக் கடனெடுக்கலாம் :

ஆயின், இந்த உட்பிரிவின்கீழ் சபையால் திரட்டப்பட்ட எவையேனும் தற்காலிகக் கடன்கள் தொடர்பில் நிலுவையாக இருக்கும் ஏதேனும் தொகைகளின் கூட்டுமொத்தம் எந்நேரத்திலும், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளை விஞ்சுதலாகாது.

(2) சபை, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான ஒருப்பாட்டுடன் அமைச்சரால் தரப்படும் சம்மதத்துடன், பின்வரும் எல்லா நோக்கங்களுக்காகவும் அல்லது அவற்

றுள் எவற்றிற்காகவும் (1) ஆம் உட்பிரிவின் கீழான தற்காலிகக் கடன் என்ற வகையிலல்லாது வேறு வகையில் பணத்தைக் கடனெடுக்கலாம் :—

(அ) தொழிற்பாட்டு மூலதனத்தை ஏற்பாடு செய்வதற்கு ;

(ஆ) எந்த நிரந்தரமான வேலையின் அல்லது வேறு அலுவலின் செலவு முறைப்படி மூலதனத்தில் பொறுப்பிக்கப் படவேண்டுமோ அந்த ஏதேனும் வேலை அல்லது அலுவல் சம்பந்தமாக உறப்பட்ட எவையேனும் செலவினங்களை ஈடுசெய்வதற்கான பணத்தை ஏற்பாடு செய்தல் ;

(இ) இச்சட்டத்தின்கீழ் சபையினால் காசாகக் கொடுபடற்பாலதாக ஏதேனும் நட்டஈட்டைச் செலுத்தும் நோக்கத்திற்காகத் தேவைப்படும் ஏதேனும் பணத்தை ஏற்பாடு செய்தல் ;

(ஈ) சபையினால் திரட்டப்பட்ட ஏதேனும் கடனை மீட்டல் ;

(உ) ஓராம் உட்பிரிவின்கீழ் தற்காலிகமாகக் கடனெடுக்கப் பட்ட ஏதேனும் பணத்தின் மீளக் கொடுப்பனவு உட்பட மூலதனப் பணங்களை முறையாகப் பயன்படுத்தக் கூடிய வேறேதேனும் நோக்கம்.

(3) சபை, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான ஒருப்பாட்டுடன் அமைச்சர் அளிக்கும் சம்மதத்துடன் அச்சூழ்நிலைகளில் சபை பொருத்தமானதெனக் கருதுகின்றவாறான ஏதேனும் முறையில் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கங்களுள் எவற்றுக்கும் பணத்தைக் கடனெடுக்கலாம்.

சபையின் நிதிகளை முதலீடு செய்தல்.

**20.** சபையின் தொழில் நோக்கத்துக்கு உடனடியாகத் தேவைப்படாதுள்ள சபையின் ஏதேனும் நிதிகள், சபை பொருத்தமானதென கருதுகின்ற அத்தகைய வகையில் முதலீடு செய்யப்படலாம்.

## பாகம் III

### நிதி

**21.** (1) சபையானது, சபையின் பொறுப்புமுயற்சிகளின் நிதி சார்ந்த உறுதிநிலைமையை உறுதிப்படுத்துவதற்கு — ஒதுக்குப் பணங்கள்.

(அ) சபையின் அசைவுள்ளனவும் அசைவற்றனவுமான ஆதனங்களின் பெறுமானத் தேய்வை மேவுவதற்காக பெறுமானத் தேய்வு ஒதுக்கு ஒன்றை ; அத்துடன்

(ஆ) பொது ஒதுக்கொன்றை,

தாபித்தலும், பேணுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஒதுக்குகள் ஒவ்வொன்றினதும் வரவுக்கென காலத்துக்குக்காலம் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டிய பணத்தொகைகள் சபை தீர்மானிக்கக் கூடியவாறாதல் வேண்டும்.

(3) சபையின் ஒதுக்குகளில் உள்ளடக்கப்பட்ட பணங்களின் பிரயோகம் சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாதல் வேண்டும்.

**22.** (1) சபையின் வருவாய் பின்வரும் அறவீடுகளைக் கொடுத்துத் தீரப்பதற்குப் பிரயோகிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், இதன்கீழே தரப்பட்டுள்ள முந்துரிமையின் வரிசைக் கிரமப்படி பயன்படுத்தப்படுதலும் வேண்டும் :- சபையின் வருவாயைப் பிரயோகித்தல்.

(அ) சபையின் வருவாய்க் கணக்கில் பொறுப்பிக்கப்பட வேண்டியவையும் தத்துவங்களையும் கடமைகளையும் பிரயோகித்தலும் புரிதலும் தொடர்பில் தொழிற்பாட்டுச் செலவினங்களும் தாபனச் செலவினங்களும் (பொருத்தமானவிடத்து பெறுமானத்தேய்வு ஒதுக்கத்திற்குப் பிரித்தொதுக்கலையும் உள்ளடக்கும்) ;

(ஆ) சபையால் திரட்டப்பட்ட தற்காலிகக் கடன் மீதான வட்டி ;

(இ) ஏதேனும் கடனாழ் நிதியத்திற்கு அல்லது கடன்மீட்பு நிதியத்திற்குக் கைமாற்றப்படவேண்டியிருக்கும் பணத் தொகைகள் ; அத்துடன்

(ஈ) ஏதேனும் அரசாங்கக் கடனுக்கான முதல் மீதான வட்டியும் முதலைத் திருப்பிக் கொடுத்தலும்.

(2) ஏதேனும் ஆண்டில் (1) ஆம் உட்பிரிவால் குறிப்பீடு செய்யப்பட்ட அறவீடுகள் கொடுத்துத் தீர்க்கப்பட்ட பின்னர் எஞ்சியிருக்கும் சபையானது வருவாயின் மேன்மிகை சபையின் பொது ஒதுக்காகப் பிரித்தொதுக்கப்படுதல் வேண்டும்.

நிதியாண்டு.

**23.** சபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

கணக்காய்வு.

**24.** அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகள் சபையின் கணக்குகளின் கணக்காய்வுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமை.

**25.** இச்சட்டத்தால் சிறப்பாக வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலன்றி, 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பாகம் IIஇன் ஏற்பாடுகள் சபையின் நிதிக்கட்டுப்பாட்டிற்கும் கணக்குகளுக்கும் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

## பாகம் IV

### தவறுகள்

தவறுகள்.

**26.** (1) சபையின் ஏதேனும் வசுவண்டியிலுள்ள எவரேனும் பிரயாணி யாக -

(அ) அவரிடமிருந்து வருமதியான கட்டணத்தின் கொடுப்பனவைத் தட்டிக்கழிக்கின்ற ;

(ஆ) அவரது சேர்விடத்தை வந்தடைந்ததன்மீது அந்த வசுவண்டியிலிருந்து, வாடகைக் காரிலிருந்து அல்லது நீர்ப்பாதையிலிருந்து வேண்டுமென்றே வெளியேற மறுக்கின்ற அல்லது அசட்டை செய்கின்ற ;

(இ) ஏதேனும் ஆபாசமான, நாகரிகமற்ற அல்லது அவதூறான மொழியைப் பயன்படுத்துகின்ற அல்லது சைகைகளைச் செய்கின்ற அல்லது எவரேனும் ஆளுக்குச் சினமூட்டும் அல்லது இழிவுபடுத்தும் சாத்தியமுள்ள ஏதேனும்முறையில் நடந்துகொள்கின்ற ;

(ஈ) அத்தகைய வசுவண்டியின் ஏதேனும் பாகத்தை வேண்டுமென்றே பழுதாக்குகின்ற ;

(உ) புகைத்தலை தடைசெய்யும் அறிவித்தலொன்றை வெளிக்காட்டி வைத்திருக்கும் அத்தகைய ஏதேனும் வசுவண்டியின் ஏதேனும் பாகத்தில் புகைக்கின்ற அல்லது பற்றவைக்கப்பட்ட சுங்கானை, சுருட்டை, சிகரட்டை அல்லது புகைப்பதற்கான ஏதேனும் பொருளை எடுத்துச்செல்கின்ற ; அல்லது

(ஊ) ஆட்களுக்கு சினமூட்டுகின்ற அல்லது எவரேனும் ஆளுக்கு அல்லது ஏதேனும் பொருளுக்குச் சேதம் அல்லது ஊறுவிளைவிக்கும் சாத்தியமுள்ள ஏதேனும் போத்தலை, திரவத்தை அல்லது வேறுபொருளை அத்தகைய வசுவண்டிக்கு வெளியே எறிகின்ற,

எவரேனும் பயணி தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது இருநூற்றி ஐம்பது ரூபாவுக்குக் குறையாததும் ஆயிரம் ரூபாவை விஞ்சாததுமானவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதல் வேண்டும் :

ஆயினும், எவரேனும் ஆள், அவரிடமிருந்து வருமதியான கட்டணத்தின் இருமடங்குடன் சேர்த்து இருநூறு ரூபா தண்டப் பணமொன்றை அத்தகைய கொடுப்பனவுகளைப் பெறுவதற்குச் சபையால் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் அலுவலர் எவருக்கும் செலுத்துவாராயின், (அ) என்னும் பந்தியின் கீழான தவறொன்று தொடர்பில் அவருக்கெதிராகக் குற்றவழக்கு எதுவும் தொடரப் படுதலாகாது.

(2) ஏதேனும் சபையின் வசுவண்டியில் -

(அ) அப்பயணத்திற்கென அவருக்கு வழங்கப்பட்ட பயணச் சீட்டை பயணம் முழுவதும் அவருடன் வைத்திருக்காத ; அல்லது

(ஆ) அந்த வசுவண்டியின் நடத்துநரால் அல்லது அதன் சார்பில் சபையால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆளினால் அவ்வாறு செய்யுமாறு கோரப் பட்டவிடத்து, அத்தகைய பயணச்சீட்டைக் காண்பிக்க அல்லது ஒப்படைக்கத் தவறுகின்ற அல்லது மறுக் கின்ற,

பயணி எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது இருநூற்றி ஐம்பது ரூபாவுக்குக் குறையாததும் ஆயிரம் ரூபாவை விஞ்சாததுமான குற்றப்பணமொன்றுக்கு ஆளாதல் வேண்டும் :

ஆயினும், அப்பயணத்திற்கென அவரிடமிருந்து வருமதியான கட்டணத்தின் இருமடங்குடன் சேர்த்து இருநூறு ரூபா தண்டப் பணமொன்றை அத்தகைய கொடுப்பனவைப் பெறுவதற்கு சபை யால் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் அலுவலரொருவருக்குச் செலுத்துவாராயின் அத்தகைய பயணிக்கெதிராக இவ்வுட்பிரி வின்கீழ் தவறொன்று தொடர்பில் குற்றவழக்கு எதுவும் தொடரப்படுதலோ அல்லது நிலைநாட்டப்படுதலோ ஆகாது.

(3) (அ) சபையால் அல்லது அதன் அதிகாரத்தின்கீழ் வழங்கப்பட்ட பயணச்சீட்டை மோசடியாகப் பயன் படுத்துகின்ற அல்லது பயன்படுத்த வேறு எவரேனும் ஆளை அனுமதிக்கின்ற ;

(ஆ) அத்தகைய ஏதேனும் பயணச்சீட்டை மோசடியாக போலிப்புனைவு செய்கின்ற, மாற்றுகின்ற, சிதைக் கின்ற, உருக்குலைக்கின்ற அல்லது அழிக்கின்ற ;

(இ) சபையிடமிருந்து அதிகாரமின்றி, அத்தகைய ஏதேனும் பயணச்சீட்டை விற்கின்ற, வழங்குகின்ற அல்லது விநியோகிக்கின்ற, விற்பனைக்கு வழங் கலுக்கு அல்லது விநியோகத்திற்கு முன்னுகின்ற ;

(ஈ) அத்தகைய அதிகாரமின்றி அத்தகைய ஏதேனும் பயணச்சீட்டாகக் கருதப்படுகின்ற அல்லது பயன் படுத்தும் ஆற்றலுள்ள ஏதேனும் அத்தகைய பயணச் சீட்டை அச்சிடுகின்ற ;

(உ) சபையின் ஏதேனும் வசுவண்டியை வாடகைக்காரை அல்லது நீர்ப்பாதையை அல்லது அதன் உபகரணத் தின் ஏதேனும் பாகத்தை வேண்டுமென்றே சேதப் படுத்துகின்ற ; அல்லது உருக்குலைக்கின்ற ; அல்லது

(ஊ) அத்தகைய வசுவண்டியின் அல்லது அதன் உபகர ணத்தின் ஏதேனும் பாகம் தொடர்பில் வசுவண்டி யின் செயற்பாட்டைத் தடைசெய்வதற்கென அல்லது அதனுடன் தலையிடுவதற்கெனத் திட்டமிடப்பட்ட எதனையும் வேண்டுமென்றே செய்கின்ற அல்லது செய்விக்கின்ற, அல்லது எவரேனும் ஆளுக்கு ஏதே னும் ஊறு அல்லது அசௌகரியத்தை விளைவிக் கின்ற, ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளி யாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது இருநூற்றி ஐம்பது ரூபாவுக்குக் குறையாததும் ஆயிரம் ரூபாவை விஞ்சாததுமானவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்குக் இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல் லது அத்தகைய குற்றப்பணம், மறியற் தண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதல் வேண்டும்.

(4) சபையிடமிருந்து அதிகாரமின்றி -

(அ) சபைக்குரிய பயணச்சீட்டுகளை வழங்குவதற்கான ஏதேனும் பொறியைத் திறக்கின்ற அல்லது வேறுவகை யில் கைவைக்கின்ற அல்லது அதனுடன் தலையிடு கின்ற ; அல்லது

(ஆ) சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் விலைப்பட்டியலை அல்லது பற்றுச்சீட்டை மாற்றுகின்ற அல்லது அதில் கைவைக்கின்ற ;

சபை அலுவலர் அல்லது ஊழியர் எவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது இருநூற்றி ஐம்பது ரூபாவுக்குக் குறையாததும் ஆயிரம் ரூபாவை விஞ்சாததுமானவொரு குற்றப்

பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலப் பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(5) சபையால் வழங்கப்பட்ட அனுமதிச்சீட்டொன்றை தம்மகத்தே வைத்திராமல் அல்லது பயணச்சீட்டொன்றைக் கொள்வனவு செய்யாமல் ஏதேனும் வசுவண்டியில், வாடகைக் காரில் அல்லது பயணி ஒருவராகப் பயணம் செய்கின்ற ஆளெவரும் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன் நீதிவானொருவரால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மீது இருநூற்றி ஐம்பது ரூபாவுக்குக் குறையாததும் ஆயிரம் ரூபாவை விஞ்சாதது மானவொரு குற்றப்பணத்திற்கு ஆளாதலும் வேண்டும் :

ஆயினும் எவரேனும் ஆள் அவரிடமிருந்து வருமதியான பயணக் கட்டணத்தின் இருமடங்குடன் சேர்த்து இருநூற்றி ஐம்பது ரூபா தண்டப்பணமொன்றை அத்தகைய கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு சபையால் அதன் சார்பில் அதிகாரமளிக்கப்பட்ட சபையின் அலுவலர் எவருக்கும் செலுத்துவாராயின் இவ்வுட் பிரிவின் கீழான தவறொன்று தொடர்பில் அவருக்கெதிராக குற்ற வழக்கெதுவும் தொடரப்படுதலோ அல்லது நிலைநிறுத்தப் படுதலோ ஆகாது.

(6) எந்த மீறுகைக்கு அல்லது தவறுகைக்கு இச்சட்டத்தின்கீழ் அல்லது ஒழுங்குவிதிகளின்கீழ் வேறு தண்டனை எதுவும் வெளிப் படையாக ஏற்பாடுசெய்யப்படவில்லையோ அந்தத் தவறாகிய இச்சட்டத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதியின் எவையேனும் ஏற்பாடுகளை மீறுகின்ற அல்லது அவற் றுடன் இணங்கியொழுகத் தவறுகின்ற ஆளெவரும், தவறொன் றுக்குக் குற்றவாளியாதல் வேண்டும் என்பதுடன், நீதிவானொரு வரால் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மீது ஐந்நூறு ரூபாவுக்குக் குறையாததும் ஆயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சாததுமான வொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாத வொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண் டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(7) ஆளெவருக்கும் எதிராக இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் தவறொன்றுக்கு குற்றவழக்குத் தொடரப்படுமிடத்து, இயைபானவிடத்து அவர் பயணச்சீட்டொன்றை வாங்கியிருந்தார் அல்லது அவரது உடைமையில் செல்லுபடியான அனுமதிச்சீட்டொன்றை வைத்திருந்தார் என எண்பிக்கும் பொறுப்பு அவருடையதாதல் வேண்டும்.

(8) இச்சட்டத்தின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின்கீழ் தவறொன்றைப் புரிய எத்தனிக்கும் ஆளெவரும், அத்தவறுக்குக் குற்றவாளியாதல் வேண்டும்.

*தவறாளர்களைக் கைது செய்தல்.*

**27.** இருபத்தாறாம் பிரிவின்கீழ் தண்டிக்கப்படற்பாலதான ஏதேனும் தவறைப் புரிகின்ற ஆளெவரும், குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையில் முரணாக எது எவ்வாறிருப்பினும், சபையின் பரிசோதகர் ஒருவரின் பதவிவரிசைக்குக் குறையாத சபையின் எவரேனும் அலுவலரால் அல்லது அத்தகைய அலுவலர் அவருக்கு உதவியாக அழைக்கக்கூடிய வேறு எவரேனும் ஆளினால் அல்லது எவரேனும் பொலிசு அலுவலரால் பிடியாணை அல்லது எழுத்திலான அதிகாரம் எதுவுமின்றி சட்டமுறையாக கைதுசெய்யப்படலாம் என்பதுடன், அவ்வாறு கைது செய்யப்பட்ட ஒவ்வோராளும் உடனடியாக -

(அ) சட்டத்திற்கிணங்க தண்டிக்கப்படுவதற்கென நீதிவான் ஒருவர் முன்னிலைக்குக் கொணரப்படுதல் ; அல்லது

(ஆ) அவ்வாறு செய்வது செயல்முறைச் சாத்தியமாயிருக்குமிடத்து, சட்டத்திற்கிணங்க தண்டிக்கப்படுவதற்கான அருகிலுள்ள பொலிசு நிலையத்திற்குப் பொறுப்பான அலுவலரிடம் கையளிக்கப்படுதல் வேண்டும் ;

ஆயினும், சபையின் சாலையொன்றுக்கு அல்லது வசுவண்டி நிலையமொன்றுக்குப் பொறுப்பான அலுவலர் ஒருவரின் பதவி வரிசைக்குக் குறையாத சபையின் அலவலர் ஒருவர், அத்தகைய ஆள் முறியொன்றை நிறைவேற்றுவதன்மீது அந்த அலுவலர் பணிக்கக்கூடியவாறு பிணைப்பொன்றுடன் அல்லது பிணையில்லாமல் அவர் அவ்வாறு தேவைப்படுத்தப்படின் அத்துடன் தேவைப்படுத்தப்படும்போது நீதிவானொருவர் முன்னிலையில் தோற்றுவதற்கென விடுவிக்கலாம்.

## பாகம் V

### பொது

*சபையுடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்வதற்குக் கம்பனி களுக்குள்ள தத்துவம்.*

**28.** ஏதேனும் கம்பனி அல்லது வேறு ஆட்கள் குழு, அதன் பணிகள் தொடர்பில் எழுத்திலான ஏதேனும் சட்டத்தில் அல்லது சாதனத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும் சபையின் கடமை களை நிறைவேற்றுவதற்கும் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும், போக்குவரத்துச் சேவைகளைக் கையளித்தல் தொடர்பிலான வற்றைத் தவிர, அவசியமான அத்தகைய வேறு எல்லா ஒப்பந்தங் களையும் சபையுடன் செய்துகொள்ளலாம் என்பதுடன், நிறை வேற்றவும் செய்யலாம்.

*இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைக் கான பாதுகாப்பு.*

**29.** (1) (அ) இச்சட்டத்தின்கீழ் சபையால் நல்லெண்ணத் துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்ட தாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காக சபைக்கெதிராக ; அல்லது

(ஆ) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் அத்த கைய பணிப்பின்மீது சபையின் உறுப்பின ரால், அலுவலரால், சேவையாளரால் அல் லது முகவரால் நல்லெண்ணத்துடன் செய்யப் பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காக அவருக்கெதிராக,

குற்றவழக்கு அல்லது துடர்ச்சி எதுவும் இருத்தலாகாது.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னிலையில் சபைக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் குற்றவழக்கில் அல்லது துடர்ச்சியில் சபையால் உறப்பட்ட ஏதேனும் செலவு சபையின் நிதியங்களி லிருந்து செலுத்தப்படுதல் வேண்டும். ஏதேனும் அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் சபைக்குச் செலுத்தப்பட்ட அல்லது அதனால் அறவிடப்பட்ட எவையேனும் செலவுகள் சபையின் நிதியங்களில் வரவுவைக்கப்படுதல் வேண்டும்.

(3) இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மீது எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பில் அவருக்கெதிராக ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னிலையில் கொணரப்பட்ட ஏதேனும் துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் (1) ஆம் உட்பிரிவில்

(ஆ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு எவரேனும் அத்தகைய ஆளினால் உறப்பட்ட ஏதேனும் செலவு, அச்செயல் அல்லது கருதப்பட்ட செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டது என நீதிமன்றம் தீர்மானித்தால் அத்தகைய செலவு அத்தகைய துடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் அறவிடப்பட்டாலன்றி சபையின் நிதியங்களிலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

சபையின் உறுப்பினர் ஒருவரின் ஆளுக்கு அல்லது ஆதனத்திற் கெதிரான ஆணை எழுதவும் வழங்கப்படுத லாகாது.

**30.** சபைக்கெதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் வழக்கில் சபையின் உறுப்பினரொருவருக்கெதிராக ஆளுக்கெதிரான அல்லது ஆதனத்திற்கெதிரான ஆணை எதுவும் வழங்கப்படுதலாகாது.

ஒழுங்குவிதிகள்.

**31.** (1) அமைச்சர் இச்சட்டத்தின் கோட்பாடுகளையும் ஏற்பாடுகளையும் நிறைவேற்றும் அல்லது அவற்றிற்குப் பயனளிக்கும் நோக்கத்திற்காக ஒழுங்குவிதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சர், குறிப்பாகவும் (1) ஆம் உட்பிரிவினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றியும் பின்வரும் கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம் :-

(அ) எக்கருமம் தொடர்பில் இச்சட்டத்தின்கீழ் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட்ட அதிகாரமளிக்கப்படுகின்றதோ அல்லது தேவைப்படுத்தப்படுகின்றதோ அக்கருமம் எதுவும் ;

(ஆ) பல்வேறு பதவிகளுக்கு குறைந்தபட்சத் தகைமைகள் உட்பட, அலுவலர்களையும் ஊழியர்களையும் ஆட்சேர்ப்பதற்கான வழிகாட்டிகளும் நடவடிக்கைமுறைகளும் ;

(இ) ஆண்டு வரவுசெலவுத் திட்டத்திலும் ஆண்டுக் கூட்டமைப்புத் திட்டத்திலும் உள்ளடக்கப்படவேண்டிய விடயங்கள் ; அத்துடன்

(ஈ) சொத்துக்களின் கொள்வனவுக்கும் கையுதிர்த்தலுக்குமான வழிகாட்டிகளும் நடவடிக்கைமுறைகளும்.

(3) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டும் என்பதுடன், வெளியிடப்பட்ட தேதியன்று அல்லது ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(4) அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது வர்த்தமானியில் வெளியிடப்பட்டதன் பின்னர் வசதிப்படக் கூடியளவு விரைவாக அங்கீகாரத்திற்கென பாராளுமன்றத்தின் முன்னிலைக்குக் கொணரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(5) ஏதேனும் ஒழுங்குவிதி இல்லாதொழிக்கப்பட்டதாக அவ்வாறு கருதப்பட்ட தேதி பற்றிய அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிடப்படுதல் வேண்டும்.

## பாகம் VI

## நீக்கமும் நிலைமாறுகால ஏற்பாடுகளும்

நீக்கம்.

**32.** இலங்கைத் தேசியப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கைப் போக்குவரத்துச் சபைச் சட்டம் இத்தால் நீக்கஞ்செய்யப்படுகின்றது.

சபையின் ஊழியர்கள், ஆதனம், ஒப்பந்தங்கள், உரிமைகள் கடப்பாடுகள் பொறுப்புகள் என்பனவும், சபைக்கு எதிரான முடிவுறாதிருக்கும்

**33.** நியமிக்கப்பட்ட தேதியன்று —

(1) இலங்கை மத்திய போக்குவரத்துச்சபை, வட பிராந்தியப் போக்குவரத்துகள் சபை, பிராந்தியப் போக்குவரத்து சபைகள், வரையறுக்கப்பட்ட வவுனியா மக்கள்மயமாக்கப்பட்ட பயணிகள் போக்குவரத்துச் சேவைகள், ஒன்றிணைக்கப்பட்ட மக்கள்மயமாக்கப்பட்ட பஸ் கம்பெனிகள், அத்துடன் வரையறுக்கப்பட்ட

வடபிராந்திய போக்குவரத்துக் கம்பெனி என்பவற்றின் தொழிலிலுள்ள எல்லா அலுவலர்களும் வேறு ஊழியர்களும் நியமிக்கப்பட்ட தேதிக்கு உடன்முன்னரான நாளன்று அவர்களது அந்தந்த நிறுவனங்களின்கீழ் அவர்களது தொழிலைச் சார்ந்த நியதிநிபந்தனைகளுக்குக் குறைந்தளவு சாதகமாக அல்லாத நியதி நிபந்தனைகளுக்கமைய சபையின் சேவையிலுள்ள ஊழியர்களாகக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய ஊழியர்களின் சேவைகள் அவர்களது தொழில் நிபந்தனைகளின் நியதிகளின்படி அல்லது தன்னிச்சையான ஓய்வுபெறும் செயற்றிட்டம் ஒன்றின் ஊடாக அல்லது ஒழுக்காற்றுக் காரணம் ஒன்றின்மீது தவிர வேறு வகையில் முடிவுறுத்தப்படுதலாகாது ;

*வழக்குகள், விண்ணப்பங்கள் என்பனவும் சபையின் முடிவுறாதிருக்கும் வழக்குகளும் விண்ணப் பங்களும் சபைக்குச் சாதகமான, திருப்திப்படுத் தப்படாத, தீர்வைகளும் அல்லது அளிப்புகளும் சபைக்குப் பாதகமான தீர்வைகளும் அல்லது அளிப்புகளும்.*

(2) நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று இலங்கை மத்திய போக்குவரத்துச்சபை, வட பிராந்தியப் போக்குவரத்துச்சபை, பிராந்தியப் போக்குவரத்துச் சபைகள், வரையறுக்கப்பட்ட வவுனியா மக்கள்மயமாக்கப்பட்ட பிரயாணி போக்குவரத்துச் சேவைகள், ஒன்றிணைக்கப்பட்ட மக்கள்மயமாக்கப்பட்ட பஸ் கம்பெனிகள் மற்றும் வரையறுக்கப்பட்ட வடபோக்குவரத்துக் கம்பனி என்பவற்றின் எல்லா அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனமும் (அந்தந்த நிறுவனங்களின் நிதியங்களிலுள்ள பணம் உட்பட), சபைக்கு உரித்தாவதாதலும் அதன் ஆதனமாகவிருத்தலும் வேண்டும் ;

(3) பிரதிபயனெதுவுமின்றி, தத்தமது நிறுவனங்களில் வரையறுக்கப்பட்ட வவுனியா மக்கள்மயமாக்கப்பட்ட பிரயாணிகள் போக்குவரத்துச் சேவைகள், ஒன்றிணைக்கப்பட்ட மக்கள்மயமாக்கப்பட்ட பஸ் கம்பெனிகள் மற்றும் வரையறுக்கப்பட்ட வடபோக்குவரத்துக் கம்பெனி என்பவற்றினால் தமது ஊழியர்களுக்கு அல்லது முன்னைநாள் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டவையும், நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று அவற்றினால் வைத்திருக்கப்பட்டவையுமான அத்தகைய எல்லாப் பங்குகளும் இச்சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் தாபிக்கப்பட்ட சபைக்கு உரித்தாவதாதலும் அதன் ஆதனமாகவிருத்தலும் வேண்டுமென்பதுடன், அத்தகைய பங்குகளைத் தற்போது வைத்திருக்கின்ற அத்தகைய ஊழியர்களுக்கும் முன்னைநாள் ஊழியர்களுக்கும் வேறெவரேனுமாளுக்கும்,

*அத்தகைய பங்கானது தற்போது சமப் பெறுமதிக்குக் குறைவாக இருக்கின்றதென்ற நிகழ்வு எவ்வாறிருப் பினும், அத்தகைய ஒவ்வொரு பங்குதொடர்பிலும் அதன் சமப்பெறுமதியில் நட்டஈடளிக்கப்படுதலும் வேண்டும்* ;

(4) *நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்றுள்ள இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை, பிராந்தியப் போக்குவரத்துச் சபைகள், வரையறுக்கப்பட்ட வவுனியா மக்கள்மயமாக்கப்பட்ட பிரயாணி போக்கு வரத்துச் சேவைகள், ஒன்றிணைக்கப்பட்ட மக்கள்மய மாக்கப்பட்ட பஸ் கம்பெனிகள் மற்றும் வரையறுக் கப்பட்ட வட போக்குவரத்துக் கம்பெனி என்பவற்றின் எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும், சபை யின் ஒப்பந்தங்களாகவும் உடன்படிக்கைகளாகவும் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஒப்பந்தங்களினதும் உடன்படிக்கைகளினதும்கீழ் சபைக்குள்ள எல்லா உரிமைகளும், மேற்கூறப்பட்ட அமைப்புக்களின் எல்லா ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் மற்றும் பணிக்கொடைப் பொறுப்புகள் உட்பட, பொறுப்பு களும், கடப்பாடுகளும், சபையின் உரிமைகளாகவும், பொறுப்புக்களாகவும், கடப்பாடுகளாகவும் கருதப்படு தலும் வேண்டும்* ;

(5) *ஏதேனும் நீதிமன்றத்தில் அல்லது நியாயசபையின் இலங்கை மத்திய போக்குவரத்துச்சபை, பிராந்தியப் போக்குவரத்துச்சபைகள், வரையறுக்கப்பட்ட வவுனியா மக்கள்மயமாக்கப்பட்ட பிரயாணி போக்கு வரத்துச் சேவைகள், ஒன்றிணைக்கப்பட்ட மக்கள்மய மாக்கப்பட்ட பஸ் கம்பெனிகள், மற்றும் வரையறுக் கப்பட்ட வட போக்குவரத்துக் கம்பெனி என்பவற்றி னால் அல்லது அவற்றுக்கெதிராகத் தொடுக்கப்பட்ட தும் அல்லது செய்யப்பட்டதும், நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முற்போந்த நாளன்று முடிவுறாதுள்ளது மான ஏதேனும் வழக்கு, விண்ணப்பம் அல்லது மேன் முறையீடு, சபையினால் அல்லது அதற்கெதிராகத் தொடுக்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட ஒரு வழக்காக, விண்ணப்பமாக அல்லது மேன்முறையீடாகக் கருதப் படுதல் வேண்டும்* ;

(6) இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை, பிராந்தியப் போக்குவரத்துச் சபைகள், வரையறுக்கப்பட்ட வவுனியா மக்கள்மயமாக்கப்பட்ட பிரயாணி போக்குவரத்துச் சேவைகள் ஒன்றிணைக்கப்பட்ட மக்கள்மயமாக்கப்பட்ட பஸ் கம்பெனிகள் மற்றும் வரையறுக்கப்பட்ட வட போக்குவரத்துக் கம்பெனி என்பவற்றினால் அல்லது அவற்றுக்கெதிராகத் தொடுக்கப்பட்ட அல்லது செய்யப்பட்ட ஏதேனும் வழக்கில், விண்ணப்பத்தில் அல்லது மேன்முறையீட்டில் ஒரு நீதிமன்றத்தினால் அல்லது நியாயசபையினால் செய்துகொள்ளப்பட்டதும் அல்லது செய்யப்பட்டதும் நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முன்னரான நாளன்று முழுமையாக அல்லது பகுதியளவில் திருப்திப்படுத்தப்படாதுள்ளதுமான ஏதேனும் தீர்வை அல்லது அளிப்பு, விடயத்துக்கேற்ப, சபைக்குச் சாதகமான அல்லது அதற்கெதிரான தீர்வையொன்றாக அல்லது அளிப்பொன்றாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், ஒரு தீர்வையை அல்லது அளிப்பை நிறைவேற்றுதல் தொடர்பாகக் குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவையின் அல்லது வேறேதேனும் சட்டவாக்கத்தின் ஏற்பாடுகளுக்கமைய, சபையினால் அல்லது அதற்கெதிராக வலுவுறுத்தவும்படலாம்.

**34.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**35.** இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய - *பொருள் கோடல்.*

"பொது ஓட்ட அட்டவணை" என்பது, தரப்பட்டவொரு மார்க்கத்தில் எல்லா வசு வண்டிகளினதும் தொழிற்பாட்டு அட்டவணைகள் ஒரே அடுக்கில் காட்டப்படும் ஓர் ஓட்ட அட்டவணை என்று பொருள்படும் ;

"அசைவற்ற ஆதனம்" என்பது, நிலம் என்று பொருளாகுமென்பதுடன், நீரினால், வீடுகளினால், கட்டடங்களினால் மற்றும் வீடுகளினதும் கட்டடங்களினதும் பாகங்களினால் அடைக்கப்பட்ட நிலத்தையும் உள்ளடக்கும் ; அத்துடன்

"வசுவண்டி" என்பது, மோட்டார் வாகனச் சட்டத்திலுள்ள அதேபொருளையுடையது.

## பாகம் VII

### 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்துக்கான திருத்தங்கள்

*1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்கச் சட்டத்துக்கான முன்னுரையைத் திருத்துதல்.*

**36.** (இதனகத்துப்பின்னர் இப்பாகத்தில் "முதன்மைச் சட்ட வாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டம் அதன் முன்னுரையில் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :-

(1) பந்தி (அ)வை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :-

"(அ) அறிவியல்ரீதியில் தீர்மானிக்கப்பட்ட பொது ஓட்ட அட்டவணையின்படி உள்ளபடியான பயணப் போக்குவரத்துத் தேவைகளைச் சமாளிப்பதற்குத் தகுதிவாய்ந்த அரசதுறை அல்லது தனியார்துறை பஸ்வண்டிச் சேவைகளிடமிருந்து பெற்றுக்கொள்ளுதல் ;";

(2) அதன் (இ) என்னும் பந்தியில், "ஆதாயமற்றவையுமான பாதைகளில்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஆதாயமீட்டாத பாதைகளிலும், சேவைகளிலும், பயணங்களிலும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) பந்தி (ஈ)ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூலமும் :-

"(ஈ) அத்தகைய சேவைகளை ஏற்பாடுசெய்பவர்களிடையே நலமார்ந்த போட்டியை உறுதிசெய்தலும், நியாயமற்றதும் பயனீட்டாதுமான போட்டியைத் தடுத்தலும் ;";

(4) பந்தி (ஈ) என்பதற்குப் பின்னர் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(உ) பஸ்வண்டிமூலமாகக் காப்பானதும் வசதியானதுமான போக்குவரத்தைப் பொதுமக்களுக்கு உறுதிசெய்தல்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவை நீக்கிவிடுதலும் பதிலீடு செய்தலும்.*

**37.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவு இத்தால் நீக்கஞ்செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :-

*"பிரயாணி போக்குவரத்துச் சேவை அனுமதிப் பத்திரங்களை வழங்குவதன் மீதான பதிவு.*

18. (1) ஆளெவரும், ஆணைக்குழுவினால் அல்லது அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினால் வழங்கப்பட்டதும், அப்போதைக்கு வலுவிலுள்ளதுமான பிரயாணி போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழன்றி, ஒரு கட்டணத்துக்காக அல்லது வெகுமதிக்காக அல்லது தனிவேறான பயணக்கட்டணத்துக்காகப் பிரயாணிகளை ஏற்றிச்செல்வதற்காக வசுவண்டியொன்றைப் பயன்படுத்துதலாகாது.

(2) இப்பிரிவின் நோக்கத்துக்காக, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாகாணங்களுக்கிடையே பிரயாணிகளை ஏற்றிச்செல்வதற்காக வசுவண்டியொன்றைத் தொழிற்படுத்துவதற்கான அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதற்கான தத்துவம் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும்.".

*பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்*